ஸ்ரீ:

# அரங்கனும் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரமும்



(ஸ்ரீரங்கம் நம்பெருமாளின் பாதுகையுடன் கூடிய திருவடிகள்)

(ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸாதித்தப்படி
ஆடூர் - ஆஸூரி - மாதவாச்சார்யன், ஸ்ரீரங்கம் )

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரம் என்கிற க்ரந்தத்தை உலகில் அறியாதாரில்லை. இது ஒரு சிறந்த நூல். இது ஒரே ராத்ரியில் ஒரே யாமத்தில் அருளிச் செய்தது. சப்தாலங்காரங்களும், அர்த்த அலங்காரங்களும் நிறைந்த நூல். இது ஸ்ரீரங்கநாதனுடைய திருவடி நிலைகளையே (பாதுகை) ஸ்துதி செய்கிற நூல். திருவடி நிலை என்கிற பெயர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ராதாயத்தில் பாதுகைக்கு வழங்கப்படும் சொல். முப்பதிரண்டு பத்ததிகள் கொண்ட நூல். பத்ததி என்றால் மார்க்கம் என்று பொருள். பாதுகைகளுடைய முப்பத்திரண்டு மார்கம். ப்ரஹ்ம வித்யைகளால் முக்தியை அடையலாம். ஸ்ரீபாதுகைகளின் ஸ்துதியான முப்பத்திரண்டு பத்ததிகளாலும் முக்தியைப் பெறலாம்.

108 திவ்யதேசங்கள் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டவை. அவைகளில் ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாள் எனப்படும் ஸ்ரீரங்கநாதன்தான் பாதுகைகளை சாத்திக் கொண்டு எழுந்தருளியிருக்கிறார். ஒரு பண்டிதர்க்கும், ஸ்ரீதேசிகனுக்கும் நடந்த ஸம்பாஷணையில் அவர் *பதகமல ஸஹஸ்ரம்* என்கிற பெயருடன் ஆயிரம் ஸ்லோகங்கள் ஒரு இரவில் கவனம் செய்கிறேன் என்று ப்ரதிஜ்ஞை பண்ணினாராம். *"ப்ரக்யாதாநாம் பரிஷதிஸதாம் காரயித்வா ப்ரதிஜ்ஞாம்"*

என்கிற ஸ்லோகத்தால் இவ்வர்த்தம் தெரிந்து கொள்ளலாம். ஸ்வாமி தேசிகன் திருவடியைத் தாங்குகின்ற பாதுகா விஷயமாக ஆயிரம் ஸ்லோகம் பண்ணக்கடவோம். இது பாதுகையுடைய நியமனம் என்று *ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரம்* என்கிற பெயரில் செய்தார். ஒரு இரவில் ஒரு யாமத்தில் செய்த இந்நூலை மறுநாள் பெரிய ஸபை நடுவில் இந்த ஆயிரம் ஸ்லோகங்களை பெரிய பெருமாள், ஸ்ரீரங்கநாச்சியாரோடு திருச்செவி சாற்றிக் கொண்டிருந்தான் என்று ஸ்ரீதேசிகனுடைய திருவாக்கிலிருந்து அறிய முடிகிறது. ***"****பரிஷதி ஸஹ லக்ஷ்ம்யா பாதுகே ரங்கநாத:****"*** என்றபடி.

ஸ்ரீபாஞ்சராத்ரம் என்கிற ஆகம சாஸ்திரத்தில் ஆதிசேஷன்தான் ஸ்ரீபாதுகையாக பெருமாள் திருவடிகளைத் தாங்குகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ***"நிவாஸ சய்யாஸன பாதுகாம்சுகோபதான வர்ஷாதப வாரணாதிபி:"*** என்கிற ஸ்லோகத்தால் ஸ்ரீஆளவந்தாரும் அருளிச் செய்தார். பொய்கையாழ்வார், ***"சென்றால் குடையாம், இருந்தால் சிங்காஸனமாம், நின்றால் மரவடியாம்"*** என்கிற பாசுரத்தில் திருவனந்தாழ்வான்தான் பாதுகை என்று அருளிச் செய்தார். பாதுகைக்கு ***சடகோபன்*** என்கிற திருநாமமுண்டு. மேலும் ஸ்ரீரங்கநாதனுடைய பாதுகைகள் பெருமாளால் நியமிக்கப்பட்டு ***"சடன்"*** என்கிற அசுரனை ஸம்ஹரித்து வந்ததால் ***"சடகோபன்"*** என்கிற திருநாமம் அர்த்தமுள்ளதாகும்.

ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய நித்யாராதனக் கிரமம், உத்ஸவங்கள், ஸ்ரீரங்கநாதனுடைய நடையழகு முதலியவைகள் நன்கு பேசப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்த்தால் எழுநூறு வருடங்களுக்கு முன்பே ஸ்ரீரங்கேசன் ஸந்நிதி அனுபவங்கள் இருந்தமைத் தெரியவரும். தவிர, ஸ்ரீரங்கத்தில் பெருமாளுக்கு நடையழகு மிகவும் விசேஷமாகச் சொல்லப்படுவது யாவரும் அறிந்ததே. ஸ்ரீமத் ராமாயணத்தில் ***"கஜ ஸிம்ஹ கதீ வீரௌ சார்தூல வ்ருஷபோபமௌ"*** என்று சொல்லப்பட்ட கஜ கதி, ஸிம்ஹ கதி, சார்தூல கதி, வ்ருஷப கதி இவைகள் அவதாரங்களுக்குப் பின்புள்ளவர்களான நாம் நம்பெருமாள் பக்கலில்தான் அனுபவிக்கலாம். மற்ற திவ்யதேசங்களில் எம்பெருமான்களுக்கு இந்த நடையழகு கிடையாது. ஏனெனில் அவர்கள் பாதுகை சாற்றிக் கொள்ளவில்லை. பாதுகையால்தான் பெருமாளுக்கு நடையழகு என்று ஸ்ரீதேசிகன் சாதிப்பதிலிருந்து நன்கு விளங்கும். மற்ற திவ்யதேசங்களில் இந்த நடையழகு இல்லாதபடியாலும், இங்கு (ஸ்ரீரங்கம்) மாத்திரம்

காண்கையாலும், அந்வய வ்யதிரேகத்தால், ஸ்ரீரங்கநாதனுடைய நடையழகுக்குக் காரணம் ஸ்ரீபாதுகைகள்தான் என்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ஸ்ரீரங்க விமானம் முன்பு முதலில் பரமபதத்திலிருந்தும், பின்பு ஸத்யலோகத்தில் ப்ரஹ்மதேவனுக்கு ஆராதிக்கப்படுவதற்காக வந்ததும், பிறகு மநுவம்சத்து ராஜாக்களுக்காக வந்ததும், பிறகு விபீஷணன் வழியாக காவேரி மத்யத்தில் வந்தது என்று புராண வ்ருத்தாந்தத்தை ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் ஒரு ஸ்லோகத்தில்அழகாக பேசுகிறார் ஆசார்யன்.




ஸத்யா லோகாத் ஸகல மஹிதாத் ஸ்தாநதோ வா ரகூணாம்
சங்கே மாதஸ்ஸமதிககுணம் ஸைகதம் ஸஹ்யஜாயா: |
பூர்வம் பூர்வம் சிரபரிசதம் பாதுகே யத்த்யஜந்த்யா
நீதோ நாதஸ்த திதமிதரத் நீயதே ந த்வயா ஸெள |

ஸ்ரீ பாதுகையே! ஸத்யலோகத்தைக் காட்டிலும், ரகுவம்சத்து ராஜாக்களுடைய ராஜதானியான அயோத்தியைக் காட்டிலும், காவேரியின் மணல் திட்டான ஸ்ரீரங்கம் மிகவும் உயர்ந்த இடம் என்று நினைக்கின்றேன். ஏனெனில் நீ பெருமாளை ஸத்யலோகத்திலிருந்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தாய். அங்கிருந்து அயோத்யைக்கு எழுந்தருளப் பண்ணினாய். அங்கிருந்து காவேரியான மணல் திட்டுக்கு எழுந்தருளப் பண்ணினாய். இங்கிருந்து வேறிடத்திற்கு போகவில்லை. ஆகையால் அவைகளைக் காட்டிலும் ஸ்ரீரங்கம் உயர்ந்தது. கீழ்ச் சொன்ன இடங்கள் பிடிக்காமல் இங்கு வந்தாய். இங்கிருந்து எங்கும் போகவில்லை. ஆதலால் எம்பெருமானுக்கு இதுவே போக்யமான இடம் என்றதாயிற்று.

ஸ்ரீரங்கநாதன் விருப்பன் திருநாள், பூபதித் திருநாள், ஆதி ப்ரஹ்மோற்சவம் இவைகளில் முதல் திருநாளிலும் மற்றும் ஏழாம் திருநாள் முதலிய விழாக்களிலும் உபயநாச்சிமாருடன் எழுந்தருளும் காட்சி ஸ்ரீதேசிகனை ஈடுபடுத்தியதை ஒரு அற்புத ஸ்லோகத்தில் காணலாம்.




கமபி கனகஸிந்தோ: ஸைகதே ஸஞ்சரந்தம்
கலச ஜலதி கந்யா மேதநீ தத்த ஹஸ்தம் |
அநிசமநுபவேயம் பாதுகே த்வய்யதீனம்
ஸுசரித பரிபாகம் ஸூரிபிஸ் ஸேவநீயம் ||

காவிரியின் மணல் திட்டான ஸ்ரீரங்கத்தில் ஸமுத்ரராஜனின் பெண்ணான லக்ஷ்மிதேவி, பூதேவி இவர்களுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ஸ்ரீபாதுகையைச் சாற்றிக் கொண்டு, நம்பெருமாள் அழகாக வீதி வருகிறார். பரமபதத்தில் இக்காட்சி கிடைக்காதபடியால் நித்யசூரிகளும் இங்கே வந்து ஸேவிக்க வேண்டும். புவியிலுள்ளவர்களுக்கு மிகுந்த புண்ணியத்தின் பயனாக அது கிடைக்கும். அந்த அழகை நான் எப்போதும் அனுபவிக்க வேணும் என்று பாதுகையை வேண்டுகிறார். இந்த ஸ்லோகத்தை அநுஸந்தானம் பண்ணிக்கொண்டு அந்த உத்ஸவங்களில் பெருமாளை ஸேவித்தால் அந்த ஆனந்தம் பரமபதத்திலுள்ள ஆனந்தத்தையும் விஞ்சியிருக்கும்.




பகல் பத்து, இராப்பத்து என்கிற திருமொழித் திருநாள், திருவாய்மொழித் திருநாட்களில் நம்பெருமாள் கர்ப்பகிரஹத்திலிருந்து புறப்பட்டு, கிளி மண்டபம் அல்லது ஆயிரங்கால் மண்டபம் ஆஸ்தானம் எழுந்தருளும் வரையில் நடுவில் ஒய்யார நடையோடு எழுந்தருளுவார். அவ்வெம்பெருமான் நடைக்கு பாதுகை துணையாயிருக்கும். அந்த நடை அற்புதமான நடை. அதை ஸ்வாமி தேசிகன் ஸேவித்து பரவசமாகி இந்த நடையைக் கொடுக்கிற பாதுகையை சரணாகதி பண்ணுகிறேன் என்று ஈடுபடுகிறார்.

உத்தஸ்துஷோ ரங்கசயஸ்ய சேஷாத்
ஆஸ்தான ஸிம்ஹாஸன மாருருக்ஷோ: |
மத்யே நிசாந்தம் மணி பாத ரக்ஷே
லீலாபதந்யாஸ ஸகீம் ப்ரபத்யே ||

ஸ்ரீரங்கத்தில் சயனித்துக் கொண்டிருக்கின்ற பெருமாள், திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலிருந்து எழுந்தருளி ஆஸ்தானம் கண்டருளும் வரையில் அந்தப்புரத்தின் நடுவில் அவன் ஒய்யாரமாக நடக்கிறான். அந்த நடை பாதுகையால்தானே பெருமாளுக்கு

அழகுபடுத்திற்று. ஆதலால் அந்த பாதுகையை சரணம் புகுகிறேன் என்று. இங்கே அடியேன் ஆச்சார்யன் திருக்குடந்தை ஆண்டவன் சொல்லும் ஒரு கதையை எழுதுகிறேன். ஸ்ரீமத் தேரெழுந்தூர் ஆண்டவன் என்று ஸூப்ரசித்வைபவரான ஆச்சார்யன், ஸ்ரீரங்கத்தில் பெரியாஸ்ரமத்தில் எழுந்தருளியிருந்தார். அவ்வாச்சர்யன் அர்ச்சாவதாரத்தையும் விபவாதாரமாக ஸேவிக்கும் ஸ்வபாவமுள்ளவர். ஸ்ரீரங்கநாதனை பல ப்ரகாரத்தாலும் அனுபவிப்பார். அவர் யாத்ரையாக திருக்குடந்தை எழுந்தருளினார். ஸ்ரீஆராவமுதனை ஸேவித்தார். அமுதனுடைய அழகு, மாதுர்யம் அந்யாத்ருசமானது. *"த்வம் மே" என்றால் "அஹம் மே" என்னப் பண்ணும் அஹங்காரமுள்ளவனையும் ஸக்ருத் தர்சனத்தால் "அடியேன்" என்னப் பண்ணும் மாதுர்யம் குடமூக்கிலே (குடந்தை) ப்ரவஹிக்கும்* என்று ஆசார்ய ஸ்ரீஸூக்தி.

ஸ்ரீரங்கநாதனைப் போல் அமுதனையும் ஸேவிக்க வேண்டும் என்று ஆசையுண்டாயிற்று ஆசார்யனுக்கு. உடனே பெருமாளுக்கு ஸ்ரீரங்கம் போல் ஒரு தோளுக்கினியான் (படிச் சட்டம்) பண்ணி வைத்து வெள்ளிக் கவசம் போட்டு, வாரைகளுக்கும் வெள்ளிக் கவசம் போட்டு, ஸ்தானீகர்கள் பிடித்து வர வெள்ளிக் குமிழும் பண்ணி வைத்தார். ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீபாதந்தாங்கிகளையும் வரவழைத்து மூன்று நாள் ஸ்ரீஆராவமுதனை எழுந்தருளப் பண்ணி ஸேவித்தார். பிறகு ஸ்ரீபாதம் தாங்கிகள் ஸ்ரீரங்கத்திற்கு புறப்பட்டார்கள். அப்போது அவர்களுக்கு உசிதமான ஸம்பாவனை செய்துவிட்டு, " உங்களை நான் வரவழைத்தது ஸ்ரீரங்கம் போல் பெருமாள் நடையை ஸேவிக்கவேணும் என்று. மூன்று நாட்களும் ஸேவித்தேன். ஸ்ரீரங்கம் போல் நடை அமையவில்லை. எனக்கு த்ருப்தியுமில்லை" என்று ஆசார்யன் சாதித்தார். அப்போது ஸ்ரீபாதந்தாங்கிகளுள் ப்ரதானரான வடபத்ரன் என்பவர் ஸ்வாமிகளிடத்து ***"ஸ்ரீரங்கம் போல் நடை ஸேவிக்க வேண்டும் என்று முன்பே எங்களிடம் சொல்லியிருந்தால் நாங்கள் வந்திருக்கவே மாட்டோமே! அங்கே நடையழகு எங்களால் இல்லை! ஸ்ரீ பாதுகையால் அன்றோ! எங்களையும் நடக்கச் செய்வது பாதுகையேயன்றோ"*** என்று விண்ணப்பித்தார். உடனே ஸ்ரீமதாண்டவன் ஒரு நாழிகை கண்ணும் கண்ணீருமாய் அழுதுவிட்டு நித்யம் பாதுகாஸஹஸ்ரம் ஸேவிக்கும் எனக்கு இந்த ஜ்ஞானமில்லையே என்று பலகாலம் சொல்லியழுதார். ஆகையால் நம்பெருமாள் நடையழகு பாதுகையால் என்பது நன்கு விளங்கும்.

மேலும் மற்றொரு அனுபவம்.

த்வயா’நுபத்தாம் மணிபாத ரக்ஷே
லீலாகதிம் ரங்கசயஸ்ய பும்ஸ: |
நிசாமயந்தோ ந புனர்பஜந்தே
ஸம்ஸார காந்தார கதா கதாநி ||

ஸ்த்ரீகளுக்கு நடை இயற்கையிலேயே அழகாகயிருக்கும். புருஷர்களுக்கு நடை அவ்வளவு அழகாயிராது. அதிலும் நடந்து அப்யாஸம் பண்ணினால் நடை நன்றாகயிருக்கலாம். பெருமாளோ புருஷன். அதிலும் சேஷ பர்யங்கத்தில் எப்போதும் சயனித்துக் கொண்டிருப்பவன். அந்த ஸ்ரீரங்கநாதனுடைய நடை அழகாகயிருக்கின்றது என்றால் அது பாதுகையால்தான். அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனுடைய ஒய்யார நடையை கண்களால் ஸேவித்தால் மறுபடியும் ஸம்ஸாரத்தில் போய் வருகிற நடை கிடையாது என்கிறார். நாம் இதுவரையில் புண்ய பாபங்களைப் பண்ணி தூமாதி மார்கத்தில் போய் மேல் லோகங்களில் சஞ்சரித்து, புண்ய பாபங்களின் பலத்தை அனுபவித்து, பின்பு மீண்டும் கீழே இறங்கி ஸம்சாரத்தில் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்தோம். ஸ்ரீரங்கத்தில் அவன் புறப்பாட்டில் நடையை ஸேவித்ததால் நமக்கு ஸம்சாரத்தில் யாதா யாதம் தொலைந்து போயிற்று. இனி பரமபதத்தில் வாசம் என்றபடி.

சரத: சதமம்ப பாதுகே ஸ்யாம்
ஸமயாஹூத பிதாமஹஸ்துதாநி |
மணிமண்டபிகாஸு ரங்கபர்த்து:
த்வததீநாநி கதாகதாநி பச்யந் ||

உத்ஸவ காலங்களில் பாஞ்ராத்ர ஆகமப்படி அர்ச்சகர்கள் பிரமன் முதலிய தேவர்களை உத்ஸவம் ஸேவிக்க ஆஹ்வானம் பண்ணுவார்கள். அந்தந்த ப்ரகரணத்திற்கு “பேரீதாடநம்” என்பர்கள். அதற்காக பிரமன் முதலிய தேவர்கள் ஸ்ரீரங்கத்தில் வந்து படுகாடு கிடப்பார்கள். நம்பெருமாள் பாதுகையைச் சாற்றிக் கொண்டு புறப்பாடு கண்டருளுவார். பாதுகையில்லாவிடில் பெருமாளுக்கு நடை ஓடாது. ஆகையால் பாதுகையைச் சாற்றிக் கொண்டு கோயிலில் உலாற்றுவார். அதை ஸேவித்துக் கொண்டிருக்க நூறு வருஷங்கள் ஆயளைக் கொடுத்து ஜீவித்திருக்க அருள் புரிய வேண்டும் என்கிறார். பரத்வாஜர் என்கிற

முனிவர் வேதத்தை முழுவதும் அத்யயனம் செய்து முடிப்பதற்கு நூறு நூறு வருடங்களாக ஜீவித்திருக்க வரம் கேட்டார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீதேசிகர் ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாள் நடையழகை மட்டும் ஸேவித்துக் கொண்டிருக்க மேலும் ஒரு நூறு வருஷம் ஆயுள் வரம் கேட்கிறார்.
பிரமன் முதலிய தேவர்கள் ஸ்தோத்திரம் செய்ய நம்பெருமாள் உலாற்றுவது காணத்தக்கது.

த்வய்யேவ பாதமதிரோப்ய நவம் ப்ரவாஹம்
நாதே! பதாவநி நிசாமயிதும் ப்ரவ்ருத்தே |
ஆத்மீய காஞ்சனருசா பவதீவிதத்தே
ஹேமாரவிந்த பரிதாமிவ ஹேமஸிந்தும் ||

ஆடி மாதத்தில் பதினெட்டாம் பெருக்கு உத்ஸவத்தை அனுபவிக்கிறார். ஆடி மாதத்தில் காவிரியில் புதுப்ப்ரவாஹம் வரும். முன்னாட்களில் பதினெட்டுப்படி ப்ரவாஹம் பெருகும் என்பார்கள். அதை கடாக்ஷிப்பதற்காக ஸ்ரீரங்கநாதன் புறப்பாடு கண்டருளுவார். ஸ்ரீபாதுகையில் ஏறிக்கொண்டு தென் திருக்காவிரிக்கு எழுந்தருளுவார். அப்போது ஸ்ரீதேசிகன் காவிரியின் ப்ரவாஹத்தை கடாக்ஷிக்கிறார். காவிரி முழுவதும் தங்கத் தாமரைப் பூக்கள் நிரம்பியிருந்தாற் போல் தோன்றிற்று. அப்போது இது என்ன ஆச்சர்யம் என்று பார்த்து நம்பெருமாள் பாதுகையைப் பார்த்தாராம். பாதுகை தங்கப் பாதுகையாதலால் பாதுகையின் தங்கத்தின் காந்தி காவேரி அலைகளில் வீசவே ஸ்வர்ணத் தாமரைப் போல் தோன்றிற்றாம்.

கோடை உத்ஸவத்தில் ஸ்ரீரங்கநாதன் புறப்பட்டு ப்ராகாரம் வழியாக வந்து ஸ்ரீபட்டாபிராமர் ஸந்நிதி வாசலில் நாலு கால் மண்டபத்தில் எழுந்தருளி புஷ்பங்கள் சாற்றிக் கொள்வார். அப்போது பாதுகையுடன் ஸேவை ஸாதிக்கும் பெருமாளை வர்ணிக்கிறார்.




அவதாத ஹிமாம்சுகாநுஷக்தம்
பதரக்ஷே த்வயி ரங்கிண: கதாசித் |
கிமபிஸ்திதம் அத்விதீய மால்யம்
விரளாவஸ்தித மௌக்திகம் விபாதி ||

நிர்விச்யமாநமபி நூதன ஸந்நிவேசம்
கைவல்ய கல்பித விபூஷண காயகாந்திம் |
காலேஷு நிர்வசஸி ரங்கயுவாநமேகா
ஸ்ருங்கார நித்யரஸிகம் மணிபாத ரக்ஷே ||

அந்த உத்ஸவத்தில் நம்பெருமாள் வெளுப்பான பன்னீரில் தோய்த்த ஈர வஸ்திரத்தை தரித்திருப்பார். ஒரே ஒரு மாலை சாத்திக் கொண்டிருப்பார். ஆபரணங்கள் அதிகமாயில்லாமல் நீலநாயகத்தோடு மாத்ரம் ஸேவை சாதிப்பார். இப்படி பாதுகையின் மேல் நின்று கொண்டிருப்பார். எவ்வளவு நாழிகை ஸேவித்துக் கொண்டிருந்தாலும் புதுசு புதுசாகவே ஸேவை ஸாதிப்பார். ஸேவித்த

பெருமாளாகவே இருக்க மாட்டார். "*பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் யாமென்றே பயில்கின்றாள்*" என்னும்படி இருக்கும். திருமேனியில் திருவாபரணங்கள் இருக்காது. திருவாபரணங்கள் இல்லாமலேயே ஆபரணங்கள் சாத்திக் கொண்டாப் போல் இருக்கும்.

திருமேனியே ஆபரணமாயிருக்கும். அப்பேர்பட்ட ச்ருங்கார நித்யரஸிகனான ஸ்ரீரங்கநாதனாகிற யுவாவை நீ அனுபவிக்கிறாய் என்று பாதுகையைப் பார்த்துச் சொல்லி அனுபவிக்கிறார்.

பெருமாளுக்கு விஸ்வரூபம் முதல் இராத்ரி திருவாராதனம் வரையில் நடக்கும் க்ரமங்களை "வந்திவைதாளிக" பத்ததியில் பேசியிருக்கிறார். அதில் ஸாயங்காலம் அனுபவிக்கும் நீராஜனம் ஆஸநவைபவத்தைப் பேசுகிறார்.

திவ்யாப்ஸரோபிருபதர்சித தீபவர்கே
ரங்காதிராஜ ஸுபகே ரஜநீமுகே ஸ்மிந் |
ஸம்ரக்ஷிணீ ஸரணயோஸ் ஸவிலாஸவ்ருத்தி:
நீராஜநாஸநமஸௌ நயது ஸ்வயம் த்வாம் ||

தினந்தோறும் கர்ப்பக்ருஹத்தில் ஸாயங்காலம் சுத்தி செய்த பிறகு தளிகை அமுது செய்யப் பண்ணி தீபம், கற்பூரஹாரத்தி செய்வார்கள். அதற்கு ஆகம சாஸ்திரங்களில் **"நீராஜநாஸநம்"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக தேவதாஸிகள் தீபம் ஏந்திக் கொண்டு வாத்ய கோஷ்டிகளுடன் பெருமாள் ஸந்நிதியில் ஸமர்ப்பிப்பார்கள். அதை அர்ச்சகர்கள் பெருமாளுக்கு மாவிளக்கு கற்பூரார்த்திகளில் சேர்த்து ஸமர்ப்பிப்பார்கள். அந்த கோவில் தேவதாஸிகளுக்கு **"திவ்ய அப்ஸரஸ் ஸ்தீரிகள்"** என்று ஸ்ரீதேசிகன் கௌரவப் பெயரிடுகிறார். இத்தால் ஸ்ரீதேசிகன் என்கிற ஆச்சார்ய ஸார்வ பௌமனுக்கு அர்ச்சாவதாரத்திலும், கோயிலிலும் எவ்வளவு பக்தி இருக்கின்றது என்பதை நாம் அறியலாம். அர்ச்சகர்கள் அழகான ஸாயங்காலத்தில் நீராஜனாஸனத்திற்காகப் பாதுகைகளை சமர்ப்பித்து திவ்யாப்ரஸரஸ்த்ரீகள் கொணர்ந்த மங்களார்த்தியை காண்பிக்கிறார்கள் என்று சாதிக்கிறார். இந்த தேவதாஸிகள் தீபம் கொண்டு வருவது ஸமீப காலங்களில் நின்று விட்டது. ஆனால் நீராஜனம் நடக்கிறது. இப்படி கோவில் அனுபவங்களை ஸ்ரீபாதுகா ஸஹஸ்ர ஸ்லோகங்களில் கண்டு அனுபவிக்கலாம்.

லக்ஷ்மீநூபுர சிஞ்ஜிதேந குணிசம் நாதம் தவாகர்ணயந்
ஆஜிக்ரந் நிகமாந்த கந்த துளசீதாமோத்திதம் ஸௌரபம் |
காலே குத்ரஜிதாகதம் கருணயா ஸார்த்தம் த்வயாசாக்ரத:
பச்யேயம் மணி பாதுகே! பரதரம் பத்மேக்ஷணம் தைவதம் ||

பாதுகையினிடத்தில் ஸ்வாமி தேசிகன் ப்ரார்த்திக்கிறார். இந்த ஸ்லோகத்தால், என்னுடைய ப்ராணன் பிரியும் காலத்தில் எம்பெருமான் நம்பெருமாள் வந்து ஸேவை ஸாதிக்க வேணும். ஸ்ரீரங்கநாயகியுடன் வரவேண்டும். உன்னையும் திருவடிகளில் சாற்றிக் கொண்டு வரவேண்டும். ஸ்ரீரங்கநாச்சியாருடைய திருவடிகளில் அணிந்துள்ள சிலம்பின் ஒலியும், பாதுகைகளின் குமிழில் போட்டிருக்கும் சதங்கை மணிகளுடைய ஒலியும் கேட்க வேண்டும். வேதாந்தங்களுடைய பரிமளமும், பகவான் அணிந்திருக்கும் துளசீ மாலை பரிமளமும் நான் நுகர வேண்டும். தாமரைப் போன்ற கண்களால் நம்பெருமாள் கருணையுடன் கடாக்ஷிக்க வேணும். அந்த பரதத்வமான பெரிய பெருமாளை நான் அந்திம ஸ்ம்ருதியின் பொருட்டு ஸேவிக்க வேணும் என்கிறார். பாதுகையே! நீதான் நம்பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வரவேணும் என்கிறார்.

காலேஜந்தூந் கலுஷகரணே க்ஷிப்ரமாகாரயந்த்யா
கோரம் நாஹம் யமபரிஷதோ கோஷமாகர்ணயேயம் |
ஸ்ரீமந் ரங்கேச்வர சரணயோ ரந்தரங்கை: ப்ரயுக்தம்
ஸேவாஹ்வாநம் ஸபதிச்ருணுயாம் பாதுகா ஸேவகேதி ||

இந்திரியங்களெல்லாம் கலங்கிப் புறப்படும் காலத்தில் சீக்ரம் அழைக்கிற யமதூதர்களுடைய பயங்கரமான சப்தத்தை நான் கேட்கக்கூடாது. ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளில் அந்தரங்க கைங்கர்யங்கள் பண்ணுகிறவர்கள் என்னை கைங்கர்யம் பண்ணுவதற்காக "ஸ்ரீபாதுகா ஸேவக" என்று அருளப் பாடிட்டுக் கூப்பிட வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றார்.

இப்படி ஸ்ரீரங்கநாதனுடைய பலவிதமான உத்ஸவங்களையும் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தால் அனுபவிக்கிறார் ஆசார்யன். இந்த ஆயிரம் ஸ்லோகங்களையும் நம்பெருமாள் கேட்டு ஆனந்தித்தார். நம்பெருமாள் ஆச்சார்யனுக்கு "வேதாந்தாச்சார்" என்கிற விருதை அளித்தார். ஸ்ரீரங்கநாச்சியார் "ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்" என்று விருதை

அனுக்ரஹித்தார். இப்படி பலப்ரகாரமாக ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் அனுபவிக்கும்படி இருக்கும்.



***www.srirangapankajam.com***